# 09-01-2025 செய்தி

## பெண்கள் பணிபுரிவதற்கு ஏற்ற நகரங்கள் சென்னையை பின்னுக்கு தள்ளி பெங்களூரு முதலிடம் பிடித்தது

- இந்தப் பட்டியலில் கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த பெங்களூரு முதலிடம் பிடித்துள்ளது. கடந்த ஆண்டின் பட்டியலில் முதலிடத்தில் இருந்த சென்னை 2-ம் இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது.
- மும்பை, ஹைதராபாத், புனே, கொல்கத்தா, அகமதாபாத், டெல்லி, குருகிராம், கோயம்புத்தூர் ஆகிய நகரங்கள் டாப் 10-ல் அடுத்தடுத்த இடங்களைப் பிடித்துள்ளன.
- பெண்களுக்கு பாதுகாப்பான தெருக்கள், சுகாதாரம் மற்றும் கல்வி வசதி, ஆகியவற்றை நகரங்கள் வழங்க வேண்டியது அவசியம். அது மட்டுமல்லாமல், பெண்களின் பொருளாதார வெற்றிக்கான போட்டி வழிகள் மற்றும் வணிகத் தலைவர்களாக அவர்கள் செழிப்பதற்கான வாய்ப்புகளையும் வழங்குவதாக நகரங்கள் இருக்க வேண்டும் என்றார்.

SURESH'

## சிறைகளில் நெரிசலைக் குறைக்க மாநிலங்களுக்கு மத்திய அரசு அறிவுறுத்தல்

- மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனை கைதிகள் தவிர பிற விசாரணைக் கைதிகள், ஏற்கனவே அதிகபட்ச சிறைத் தண்டனையில் பாதியை அனுபவித்திருந்தால், அவர்கள் ஜாமீனில் விடுவிக்கப்படுவதை மாநிலங்கள் உறுதி செய்ய வேண்டும்.
- இதை வலியுறுத்தும் பாரதிய நியாய சம்ஹிதா, சட்டம் பிரிவு 476-இன் கீழ் கைதிகளை விடுவிக்க சிறை கண்காணிப்பாளர்கள் நீதிமன்றத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.
- முதல்முறை குற்றம் செய்தவர்கள் அதிகபட்ச தண்டனையில் மூன்றில் ஒரு பங்கு வரை அனுபவித்திருந்தால், அவர்கள் நிபந்தனைத் தொகையை செலுத்துவது மூலம் ஜாமீனில் விடுவிக்க சிறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டது.

